*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***DVC. 09/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1***

*Name / Father's Name:* ***திருமதி.ஜெயபாரதி க/பெ. தமிழ்செல்வன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.03.2026.**

துவக்க நேரம் – 11.41 F.N

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இவ்வழக்கில் கடந்த 02.03.2026 அன்று எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.6 வரை குறியீடு செய்திருந்தேன். தற்பொழுது எனது தரப்பு கூடுதல் ஆவணங்களாக பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. எனது ஆதார் அட்டையின் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் **ம.த.சா.ஆ.7** ஆகும்.
2. நான் கர்ப்பமுற்றதற்கான சான்றின் அசல் **ம.த.சா.ஆ.8** ஆகும்.
3. நான், தலைவாசல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு தலைவாசல் காவல் நிலையத்தாரால் பதிவு செய்யப்பட்ட CSR-ன் அசல் **ம.த.சா.ஆ.9** ஆகும்.

மனுவின்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc.,B.Ed படித்துள்ளேன். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றதா என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் MCA படித்துள்ளார். எங்களது திருமணத்தின்பொழுது எதிர்மனுதாரர் வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரிதான், வீட்டில் விவசாயம் செய்துகொண்டிருந்தார். எங்களது திருமணத்தின்பொழுது நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் ஆத்தூரில்

உள்ள SM கார் கம்பெனியில் Customer Care incharge ஆக பணிபுரிந்து மாதசம்பளமாக ரூ.12,000/− வாங்கிக்கொண்டிருந்தேன், திருமணத்திற்கு பின்னிட்டு ஒருவரும் பணிபுரிந்தேன், பின்பு பணிக்கு செலலவில்லை. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தை இல்லை என்று சொன்னால் சரிதான்.

2) எனது பெற்றோர்கள் விவசாயம்தான் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். எனது பெற்றோரின் ஊர் எதுவென்றால் வாழப்பாடி வட்டத்தில் உள்ள சென்றாயன்பாளையம் ஆகும். எனது பெற்றோருக்கு மூன்று பெண் பிள்ளைகள், அதில் நான் நடுப்பிள்ளை, எனது அக்காவிற்கு திருமணமாகிவிட்டது, எனது தங்கை பிரபாவதிக்கு திருமணம் ஆகவில்லை, அவர் மட்டும்தான் வேலைக்கு சென்றுவருகிறார், எனது அப்பாவிற்கு 75 வயது ஆகிறது.

3) எனது திருமணத்தை யார் முன்னின்று நடத்தி வைத்தார்கள் என்றால் எனது அப்பாவின் தாய்மாமாவின் மகன் பிரகாஷ், எனது அக்காவின் மாமனார் பச்சமுத்து ஆகியோர்கள் முன்னின்று நடத்திவைத்தார்கள். பச்சமுத்து என்பவர் பாட்டாளி மக்கள் கட்சியின் சேலம், கிழக்கு மாவட்ட தலைவராக உள்ளார் என்றால் சரிதான். மேலும் கல்பகனுர் ஒன்றிய கவுன்சிலர் என்றால் சரிதான்.

4) நானும், எதிர்மனுதாரரும் திருமணமாகி ஒருவருடம், இரண்டு மாதம் சந்தோஷமாக இருந்தோமா என்றால் ஆமாம். திருமணமான பின்பு நானும், என்னுடன் எனது கணவரும் எனது கணவரின் தாயாரும், எனது கணவரின் தாயாருக்கு தாயாரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோமா என்றால் இல்லை, நானும், எனது கணவரும், எனது மாமியாரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம்.

5) நாங்கள் குடியிருந்ததாக சொல்லும் வீடு தேவியாக்குறிச்சியில் உள்ள தோட்டத்திற்குள்ளேயே அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தோட்டம் என்பது 10 ஏக்கர் விவசாய நிலம் கொண்டது என்று சொன்னால் சரிதான். இன்றைய தேதியில் மேற்படி தோட்டம் எதிர்மனுதாரரின் தாயார் பச்சியம்மாளின் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த வீடும் பச்சியம்மாளின் பெயரில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

6) இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த மேற்படி ஆவணத்தில்

எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை மறுத்து பிரமாண பத்திரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர், எனக்கெதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

7) நான் ஆத்தூர், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.227/2024 என்ற எண்ணில் மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/–வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான், எதிர்மனுதாரருன் சேர்ந்து வாழவரச்சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அல்லது வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சேர்ந்து வாழவைக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன், வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. அவ்வாறு எதிர்மனுதாரருடன், சேர்ந்து வாழவைக்கச்சொல்லி தாக்கல் செய்திருந்த வழக்கின் நகலை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் மேற்படி வழக்கின் நகல் என்கைவசம் உள்ளது, தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

8) எதிர்மனுதாரர் போட்டிருக்கின்ற விவாகரத்து வழக்கில் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம், ஆனால் அது செலவுத்தொகையாக கேட்டுள்ளேன். இவ்வழக்கில் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/– கோரியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 12.18 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.05 16:25:50 +0530

Judicial Magistrate No.2, Attur.